1979 மார்ச் 20]

வரம்பு நிர்ணயம் செய்யப்படாமல் இருந்தது, ஆனால் இடைக்காலத்தில் அவர்களுக்கு வயது வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டதா? எப்போது அது செய்யப்பட்டது? அதனுடைய விவரம் என்ன என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மற்றும் வயது வரம்பு தேவை இல்லை என்ற நிலைமை இருந்தது. ஆனால் கடந்த அரசு 30 வயது என்று நிர்ணயம் செய்து கொடுத்தது. அதற்குக் காரணம் குறைந்தது 25 ஆண்டுகளாவது அவர்கள் பணியில் இருக்கவேண்டும் என்பது தான்.

திரு. வீ. கே. கோதண்டராமன் : சார், கனம் அமைச்சர் அவர்கள் பதிலிலேயே குறைந்தது 25 ஆண்டுகளாவது அவர்கள் பணியாற்றவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அப்படி வருகிறபோது 30 பிளஸ் 25—55 ஆகிறது. ஆகவே 30 வயது வரையில் என்று எல்லோருக்கும் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 30 வயது என்பது தாழ்த்தப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்ட தனிச்சலுகை. அதை எல்லோருக்கும் அளித்து விட்டால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு பின் என்ன சலுகை அளிப்பது.

செய்தித் தாட்கள் மீது நடவடிக்கை.

வினா எண் 481—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அரசியல் தலைவர்களைப்பற்றி தனிப்பட்ட முறையில் அவதூறாக எழுதி வரும் செய்தித் தாட்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதுவரை எந்தெந்த செய்தித் தாட்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—

(அ) குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 199 (1)-ன் கீழ், தனிப்பட்ட முறையில் ஒருவர் மீது அவதூறு கூறப்பட்டால், அதனால் பாதிக்கப்பட்ட நபர் மனு செய்தாலன்றி அவ்வழக்கினை கோர்ட்டார் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே அரசியல் தலைவர்களைப் பற்றி தனிப்பட்ட முறையில் அவதூறாக எழுதி வரும் செய்தித் தாட்கள் மீது பாதிக்கப்பட்டவர்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1979 மார்ச் 20

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இதே அவையில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இத்தகைய செய்தித் தாள்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். அண்மையில் ஒரு குறிப்பிட்ட பத்திரிக்கையின் பெயரைக் கூறி கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும் என்று கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒரு பத்திரிக்கை என்று இல்லை. சில பத்திரிக்கைகள் இருக்கின்றன. அதை ஒட்டித்தான் இந்த அரசு பொய்யான, தவறான, கீழ்த்தரமான, அவதூறான செய்திகளைப் பரப்புவதைத் தடுக்கும் நோக்கத்துடன் ஒரு மசோதா ஒன்றைத் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இருக்கின்ற சட்டம் போதாது என்று புதிய சட்டம் கொண்டு வரப்போவதாகவும், மத்திய அரசுக்கு அதை அனுப்ப இருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே உங்களுக்கு இருக்கும் அதிகாரத்தை வைத்து அந்தப் பத்திரிக்கைகளுக்கு கொடுக்கப் பட்டிருக்கும் 'அக்ரிடிஷன்' கேன்சல் செய்யலாம். சட்டமன்ற நூலகத்தில் அந்தப் பத்திரிக்கையை வைக்காமல் இருக்கலாம். அந்த அடிப்படையில் இன்னும் ஒரு பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக் காட்டிய பிறகும், 'நீதியின் குரல்' என்ற பத்திரிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை—உடனே நடவடிக்கை எடுக்கிறேன் என்று முதலமைச்சர் சொன்னார்களே, அப்படிச் சொல்லி 15 நாள் ஆகியும் நடவடிக்கை எடுக்காதது ஏன் ? உடனே என்றால் அர்த்தம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்த அடிப்படையில் அந்தக் கருத்தைச் சொன்னார்களோ அந்தக் கருத்தின் அடிப் படையில்தான் அந்த மசோதா தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் அது 'நீதியின் குரல்' என்று இருந்தாலும், 'அலை ஓசை' என்று இருந்தாலும் வேறு எந்தப் பத்திரிக்கையாக இருந்தாலும், தமிழகத்தைப் பொறுத்தவரையில், தமிழக மக்கள் மத்தியில் அரசியல் வாதிகளைப் பற்றி வேண்டுமென்றே பொய்யான, தவறான, கீழ்த்தரமான, அவதூறான தகவலைத் தருவதன்மீது இந்த அரசு பண்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கருதுகிறது. இங்கே அக்ரிடிஷன் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது இந்தக் கேள்வியில் எழுப்பப்படவில்லை.

(திரு. க. சுப்பு எழுந்தார்.)

1979 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது என் அனுமதி இல்லாமல் எழுந்து பேசக் கூடாது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது.

திரு. க. சுப்பு : இட் ரிலேட்ஸ் டு தி அஸ்ஸூரன்ஸ் கிவன் பை தி சீப் மினிஸ்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிக் கேட்டுக் கேட்டு வலியுறுத்திப் பேசுவது சரியல்ல. இப்படிப்பட்ட முறையை நான் அனுமதிக்க முடியாது. தயவு செய்து உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கக் கூடாது. தாங்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

திரு. க. சுப்பு : கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பக் கூடாது என்று இல்லை. அவர் கேள்விக்குச் சொன்ன பதிலில் இருந்து தான் கேட்கிறேன். அதுவும் விதி முறைகளை ஒட்டித்தான் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் மறுபடியும் சொல்கிறேன், கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது முறையல்ல. தலைவரிடமிருந்து கட்டாயப்படுத்தித் தாங்கள் அந்த வாய்ப்பைப் பெற முடியாது.

திரு. க. சுப்பு : நான் சொல்லிவிடுகிறேன். பின்னால் தாங்கள் அது பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது, இல்லை என்று ரூலிங் தாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், திரு. தாமரைக் கனி.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே,..... (குறுக்கீடு).

திரு. க. சுப்பு : சீஃப் மினிஸ்டர் ஒரு குறிப்பிட்ட பத்திரிகையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். அதை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு பத்திரிகையை சொன்னபோது நீங்கள் எழுந்தீர்கள். அப்படி எழுந்திருப்பது தவறு. என்னுடைய அனுமதி இல்லாமல் நீங்கள் பேசுவதே தவறு. நீங்கள் என்ன சொன்னாலும் நான் அனுமதிக்க மாட்டேன் ; உட்காருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் படிக்கக்கூடிய நூலகங்களில் இருந்து தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவரைப் பற்றித் தரக்குறைவான செய்திகளை வெளியிடுகின்ற அலை ஓசை, இனமுரசு, முரசொலி போன்ற பத்திரிகைகளை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சட்டமன்ற நூலகத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலேயே அத்தகைய போக்கு சரியான போக்கு ஆகாது. அது ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பாற்றாது என்ற அடிப்படையில்தான் இவைகள் எல்லாவற்றையும் தடுக்கின்ற அடிப்படையில் ஒரு மசோதா கொண்டுவரப்பட இருக்கிறது.

திரு. க. சுப்பு : முதலமைச்சரே வெட்கப்பட்ட ஒரு பத்திரிகை பற்றி கேள்வி கேட்க விரும்புகிறேன். அதற்கு அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் இப்படித்தான் கேட்பதா ? ஒரு பிரச்சனைக்கு பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி, பதில் சொல்லித்தான் ஆக வேண்டுமென்று கேட்கின்ற முறை கேள்வி நேரத்தில் கிடையாது. தயவு செய்து உட்காருங்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தன்னுடைய பதில் உரையில் ஒரு குறிப்பிட்ட பத்திரிகை மட்டுமல்ல, இன்னும் சில பத்திரிகைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். நான் ஏற்கனவே, சென்ற ஆண்டில் இந்த அவையில் பேசும் வாய்ப்பு கிடைத்தபோது, இந்தத் தரப்பிலும் சரி, அந்த தரப்பிலும் சரி, தரக்குறைவான செய்திகளை வெளியிடும் பத்திரிக்கைகளைத் திருத்த சட்டப்படிக்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தேன். அண்மையில் கூட முதலமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட பத்திரிகையின் பெயரைச் சொல்லி, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, எவ்வளவு சீக்கிரம் அத்தகைய பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுப்பீர்கள் ?

TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 20]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அவதூறான செய்திகளை வேண்டுமென்றே பத்திரிகைகள் வெளியிடுமானால் அரசியல்வாதிகளுக்கு என்ன பாதுகாப்பு என்ற அடிப்படையில் எழுந்த கேள்வி இது. அதனால்தான் சட்டரீதியாகத் தடுக்க வேண்டுமென்ற முறையில் ஒரு மசோதா கொண்டுவரப்படும் என்று சொன்னேன். ஆங்காங்கே இப்படிப் பட்ட சில பிரச்சினைகள் எழுப்பப்படும்போது அவைகள் இந்த சட்டத்தின்படி இல்லாமல் போய்விடும் என்று நம்பு கிறோம்.

திரு. க. நாச்சிமுத்து : தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரின் பத்திரிக்கையான முரசொலியிலும் தி.மு.க. நாளேடு களிலும், அலை ஓசை, இனமுரசு போன்ற பத்திரிகைகளிலும் மாண்புமிகு முதலமைச்சரைப் பற்றி அவதூறாக எழுதி வருவது அரசுக்குத் தெரியுமா ? (குறுக்கீடு) அந்தப் பத்திரிக்கைகள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(பதில் இல்லை.)

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, ஒரு பத்திரிகையில் தரக்குறைவாக எழுதப்படுகிறது. 'குஷன் மீசை கூத்தக்குடி சண்முகம், அரிவாள் மீசை அம்பிகா பதி' என்றெல்லாம் அழகாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள். குடித்தால், 6 மாதம் சிறைத் தண்டனை, வேலை நிறுத்தம் செய்தால் 6 மாதம் தண்டனை, ஆண் விபசாரம் செய்தால் 6 மாதம் சிறைத் தண்டனை என்று இருப்பதைப் போல தரக் குறைவான செய்திகளை வெளியிடுகின்ற பத்திரிக்கையாளர் களுக்கும் 6 மாதம் சிறைத் தண்டனை என்று மத்திய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 6 மாதம் கூட போதாது. ஒரு வருஷம் இருக்க வேண்டுமென்பது அரசின் விருப்பம்.

கொடைக்கானலைத் தனி மாவட்டமாக்கல்.

வினா எண் 482— திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

கொடைக்கானலைத் தனி மாவட்டமாக்கி மலைப் பிர தேசத்தை மேம்பாடு செய்யும் திட்டம் அரசு ஆலோசனையில் உள்ளதா ?